Subscription
Inland : Rs. 50/- per year.
For Advertisements
Apply to:
The Manager
Morning Star, Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/64/News/87

Established : 1841 : A Christian Weekly: Published Every Friday

Vol. 149 Jaffna, Friday, 3 March 1989 No. 9

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERED ISSUES
Please re-address all undelivered issues of the MORNING STAR to
The Manager,
"Morning Star"
Vaddukoddai.

## TAMIL CHURCH TIMES

"Tamil Church Times — the Newsletter of the Tamil Christian Congregation of Victoria, St. Peter's Church, Murrumbeena contains news of the activities during Lent of this Church in Australia. The Priest in Charge is Rev. A. J. C. Selvaratnam, formerly of St. John's Church, Chundiculi. A notable organisation, attached to this Church is the Tamil Senior Citizens Fellowship, Victoria which had its first Annual General Meeting on 12-2-89. The President of the Fellowship is Mr. A. S. Joseph, till recently a member of the Uduvil Church. The Secretary of St. Peter's Church, Murrumbeena is Mr. J. Ariaratnam, 14, Christine Road, Rosannai. Live wires of the Support Committee are Mrs. Rathi Selvaratnam, and Mrs. Anto Samuel.

Miss Dharshini Jesudason, elder daughter of Mr. & Mrs. K. T. Jesudason who obtained a first class in Chemistry at Jesus College, Oxford, has been awarded a five year research grant by Stanford University, California. Mr. K. T. Jesudason was a teacher at Wesley and Mrs. Chandra Jesudason (nee Nalliah) was a teacher at Vembadi before her marriage.

Tilak Ratnanather of Woodward Green, Essex is the first deaf student to take a Mathematics Degree at University College, London. He is currently doing research at Jesus College, Oxford in computational fluid dynamics which would help others with impaired hearing. He is the 24 year old son of Percy and Narishta Ratnanahter of Essex. He was selected last year as one of Britain's young Deaf Achievers.

The Inaugural Meeting of the Medical Institute of Tamils was held on January 8 at Trinity Hall, East Ham. London. The key objectives of the MIT (U. K) are to be an information centre for medical and para-medical under graduates, and post graduates, to monitor and enhance the recognition of hospitals and undergraduate and post-graduate training in the Tamil homelands, and to assist and ensure the selection of candidates from the Tamil homelands for appropriate training in U. K. and elsewhere. Dr. Daya Somasundaram from the Jaffna University who is on a years leave at Leeds University made an important contribution when he highlighted the problems of youth in the Tamil homelands.

Three World Christian Conferences are in preparation for 1989. The WCC Conference on Mission and Evangelism in San Antonio, Texas in May, with 600 participants: Lausanne II in Manila in July with 4000 participants and the World Communication Congress in October, also in Manila.

## SECOND ANNUAL GENERAL MEETING OF IESL Jaffna Centre

"Some extracts from the Jaffna Centre Newsletter of October 1988 are reproduced below".

The Second Annual General Meeting of the Institution of Engineers, Sri Lanka, Jaffna Centre took place on 17th September, 1988. The Meeting was chaired by Chairman of the Jaffna Centre Mr. A. C. Canagarajah. Following the Chairman's address the house adopted the minutes of the previous meeting and passed the accounts for the period of 1st April 1987 to 31st December 1987. This was followed by election of Office bearers. (Please see below).

The following were discussed and decided.

- The house discussed the need for a permanent office and space for a Library.
- The letter sent by Jaffna College Institute of Technical, regarding recognition of their courses by the Institution of Engineers was read out and discussed with copies of the letter circulated among members. It was unanimously decided by the members to strongly recommend the request and to forward the same to the consideration of the Council of the Institution of Engineers.
- Mr. S. Ruthiralingam was elected to organise and to be in charege of the Library. He suggested using a room in his office building at 165, 4th Cross Street, Jaffna for the Library for the time being and this was accepted by the house.

## IESL – JAFFNA CENTRE OFFICERS 1988/89

### CHAIRMAN

Mr. A. C. Canagarajah BSc. Eng (Lond), C. Eng, FICE (UK) FIE (SL), Engineering Consultant.

### SECRETARY CUM TREASURER

Mr. R. Shanmugaratnam, BSc. Eng, C. Eng, MIE (SL), MIEEE (U.S.A). General Manager, Tharma Power Plant, Lanka Cement Ltd., Kankesanthurai.

### COMMITTEE MEMBERS

Mr. S. Ruthiralingam, BSc, Eng. M. Sc. (Leeds), C. Eng, FIE (SL), MICE (Lond), MBIM. Resident Project Manager. Samacon Ltd., Jaffna.

Mr. A. P. Ranjithabalan, BSc. Eng, C. Eng, MIE (SL), MIE (Aust), MIProdE (UK), MBIM, Deputy General Manager, Lanka Cement Ltd., Kankesanthurai.

Mr. S. R. Kanaganayagam, BSc. Eng, C. Eng, MICE (Lond) MIE (SL).

Supdt. Engineer, Northern Division, Dept. of Buildings, Jaffna.

Mr. M. Jananayagam, BSc. Eng, C. Eng, MIE (SL), MIProdE,

Manager (Designs & Development) Lanka Cement Ltd., Kankesanthurai.

Mr. S. A.P Thurairatnam, BSc. Eng, C. Eng, MIE (SL),

Acting Director, Jaffna College Institute of Technology, Vaddukoddai.

### EDITOR

Mr. M. Jananayagam, BSc. Eng, C. Eng, MIE(SL), MIProdE.

Manager (Designs & Develop. ment) Lanka Cement Ltd., Kankesanthurai.

( continued from 4th Page )

British churches as well as to the Tamil Christians As your readers may be aware that there are several groups of the Tamil Christian gatherings and ad - hoc advisory comittees in and around United Kingdom. But there is no formal organisation to raise the issues of the Tamil People to the British Churches and to the related organisations.

The first Action of the ACT was the publication of a Booklet "OPPRESSED TAMILS NEED YOUR VOICE" to be circulated to all the partieipants at the Lambeth Bishops Conference held at Canterbury in August 1988. The organising ability of Mr. Vasanthan (Ex-Chair TRAG) and the help of the TRAG Documentation unit staff made this appeal to be heard by the conference.

On the 7th of November 1988 the British council of Churches, Community and race relations unit had organised a meeting at the Convocation Hall, Church House adjoining the Westminister Abbey on the theme "REFUGEES IN BRITAIN WHAT CAN THE CHURCHES DO"

This meeting was particularly addressing the Sri Lanka situation. The meeting was chaired by the Bishop of Ripon Rt. Rev. Young who had been in Sri Lanka this May. The speakers were Messers.

David Burgess (Solicitor Actg. for Refugees)
Malcolm Roger (British Refugee Council Sri Lanka Project)
C. T. Premarajah (Representing TRAG and ACT)

Many others representing European and Asian organisations took part.

Rev. David Haslam of the Division of Community affairs of the British council of churches who was the convenor of this meeting promised to take the issues up with BCC.

It is envisaged that TRAG may take the initiative along with the ACT to organise a One Day seminar on the Tamil Issue.

## Tamil Youth Service At Putney

The fourth Tamil Youth service was held at the Putney Methodist Church on 23rd October 1988. The service was led by Mrs. Malathi Krishnarajah (Grand Daughter of late David Asserwatham Uduvil) Others who took part were Miss. Nanthini Jeevaratnam. Mrs. Ranji Rajaratnam Lesson was read by Mr. Patrick Ratnarajah (Grand son of Bishop Kulandran Message was given by Mr. Seyan Satkunasingham (Kopay Church) There was a very large gathering and it was a blessed occasion to see the young Tamils taking active part in the community's spiritual needs. The Secretary of the London Tamil Congregation the enrgetic Stanley Nalliah and his Deputy Mr. Mahan Solomons (Both from Uduvil parish) made the service a reality amidst several difficulties. The duo was whole heartedly supported by the musical co-ordinators of the church Mrs. R. Sreeharan and Mr. G. Samuel

The annual carol service was held on the 11th of December 1988 and the watch night service was conducted by Rev. Karunairajan of the Jaffna Methodist Church.

Vigil for peace has been organised by the Wimbledon Methodist Church on the 11th of November. Tamils will be gathering for prayers and meditation for their Homelands on the Boxing Day at Putney Church. This action will be led by Rev. S. S. Karunairajan and Messrs: Stanley Nalliah and Mahan Solomons.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாரகை ஒளி**

**வஞ்சகப் போஜனம் மனுஷனுக் கின்பம்:**
**பின்பவன் வாய்பரல் கற்களால் நிறையும்.**

# எங்கள் கருத்து

## உயிரோடு இருக்கையில் விசுவாசம்

''நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் உயிரோடு இருக்கையில் என்னில் விசுவாசம் வைத்திருப்பவன் என்றென்றும் மரிப்பதில்லை'' என்று நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்தானிதா மரியாளுக்கு எடுத்துக் கூறினர்.

மரித்தவன் பிழைப்பது
உயிரோடு இருக்கிறவனுக்குச் சாவாமை

இதுதான் யோவான், சுவிசேடத்தின் அடிநாதம். இதனைத்தான் தமிழ் வல்லுனர்கள் ''மரணமில்லாப் பெருவாழ்வு'' என்றனர்.

இன்று உலகிற் பலர், பலவித செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்றனர் அல்லது பெருவாழ்வு வாழகின்றனர் என்று நினைக்கின்றனர். ஆனல் அவர்களுடைய உள்ளம் செத்ததாய் இருக்கும். உள்ளத்திலே அன்பு இல்லை, மகிழ்ச்சி இல்லை, ஆர்வம் இல்லை. இயந்திரங்களாக வாழ்ந்து தமது சீவிய ஒட்டத்தை முடிக்கின்றனர். இப்படிப்பட்டவர்களைத்தான் நமது ஆண்டவர் மரித்து போனவர் என்ருர். தமிழிலே இதற்கு ஓர் அழகான சொற்ருெடர் இருக்கிறது. அதுதான் ''நடைபிணம்'' என்பதாகும். அவர்கள் உயிர்வாழ்ந்து கொண்டு இருப்பார்கள் உள்ளம் செத்துபோய் இருக்கும். இப்படி பட்டவர்கள் இயேசு பிரானை ஏற்றுகொள்ளும் பொழுது உயிர் பெற்று விடுவார்கள். அவர்களுக்கு இப்பொழுது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படுகிறது.

அச்சம் அகன்று விடுகிறது. அஞ்சுவ யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை'' என்ற உயர்ந்த மனேநிலை அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டுவிடுகிறது. மரணத்துக்கு பின் ஏற்படுகின்ற உயித்தெழுதலை நாம் மறுக்கவில்லை. இதனைப்பற்றி மரியாளுக்கு ஆண்டவர் கூறுகிருர். நியாயத்தீர்ப்பு நாளிலே எல்லோரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என அறிந்து இருக்கிறேன் என்ருள். ஆனல் நமது ஆண்டவர் அந்த உயிர்த் எழுதலை ஈண்டு குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிட்டது பூலோகத்திலே பெறப்படும் நிலையான வாழ்வு என்பதுதான். இந்து சமயத்தில் இதற்கு இணையான கோட்பாடு ஒன்று இருக்கிறது. அது தான் 'ஜீவன் முக்தர்'' என்பதாகும்.

இந்த விதமான நிலையான வாழ்வை இப்பூவுலக வாழ்க்கையிலேயே ஒருவன் பெற்று விடவேண்டும் என்று தான் நமது ஆண்டவர் பாடு பட்டார். உயிரோடு இருப்பவன் யார்? அன்பு உள்ளம் கொண்டவன், பிறருக்குச் சேவை செய்யும் ஆர்வம் உடையவன். இறைவனை கை பிடிப்பதனல் தனக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படமாட்டாது என்று நினைக்கிறவன். இப்படியான நிலையில் உள்ளவன் மரணித்து விடாமல் இருப்பதற்கு என்றும் யேசுவின் இடத்து நம்பிக்கை தளராதவனக இருத்தல் வேண்டும்.

விசுவாசத்திலே தளர்வு உள்ளவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் மரணத்துக்கு அடிமையானவர்கள். இயேசுவின் மீது நம்பிக்கை வைப்பதால் உயிர்பெற்றுவிடுவார்கள். அவர்களுடைய அச்சம் எல்லாம் அகன்று விடும். மகிழ்ச்சியுடன், பயன் உள்ள வாழ்க்கையை அவர்கள் வாழத்தொடங்கி விடுகிருர்கள்.

இதில் இருந்து பூவுலகத்திலே வாழ்கின்ற ஒருவனுக்கு ஒட்சிசனைப் போல அதிமுக்கியமாக இருப்பது விசுவாசம் என்று தெரியும். அதனை ஒருவன் இழந்து விட்டால் தன் வாழ்க்கையின் நோக்கத்தை அவன் இழந்து விட்டவன் ஆகின்ருன். அவனுடைய வாழ்க்கை எதற்கும் பயப்படுகின்ற முயல் வாழ்க்கையாக ஆகிவிடலாம். அல்லது வஞ்சனை செய்து கொண்டு இருக்கும் கொடிய சர்பப வாழ்க்கை ஆகிவிடலாம், தனக்காகவே வாழ்ந்து மடிந்து போகின்ற நஞ்சுமரம் போல் ஆகிவிடலாம். இத்தகைய மரணங்களில் இருந்து மனிதனை காப்பாற்றவே இயேசு பிரான் பூவுலகத்திற்கு வந்தார். ஆகவே நாமும் இது வரை காலமும் நடைபிணங்களாக இருந்ததால் இயேசுவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு உயிர்பெற்றுவிட முயலுவோமாக! நமது ஆண்டவர் கூறிய சிற வாசகங்களை எப்பொழும் மனதில் நிலைநிறுத்துவோம்.

**என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்**
**உயிரோடு இருக்கையில் என்னில் விசுவாசமாய் இருக்கிறவன்**
**என்றென்றும் மரிப்பது இல்லை**

S. J

---

சிறு கதை

### தச்சனின் தனயன்

பாறிக் கிழவியாலோ... அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பருவக்குமரியான அவளது பேத்தி வசந்தி. முன் வீட்டு போதகரின் மகன் குமாருடன் முற்றத்தில் நின்று ''பாற்மின்டன்'' விளையாடும் காட்சி பார்க்கையில் அவளுக்கு அருவருப்பை ஏற்படுத்தியது.

அவர்கள் விளையாட ஆரம்பித்த நேரத்திலிருந்து பழஞ்சீலை கிழிவது போலப் புறுபுறுத்துக் கொண்டிருந்தாள் பாறிக்கிழவி.

''எடி பிள்ளை... வசந்தி, இஞ்சார்... நீயொரு குமர்ப்பிள்ளையல்லே ... சீ... சீ... உதென்ன பவுசு கெட்ட விளையாட்டு றேட்டோரம் ஒவ்வெண்டு திறந்தாப்போல, கிடக்கிற இருந்த முத்தத்திலே நிண்டு நீ விளையாடுறதை போறவ[illegible] மாதிரியாப் பாத்துக் கொள்ள கொஞ்சமெண்டாலும் மரிசாதியாய் இருக்கிறதில்லையே பிள்ளை.''

வெள்ளை வௌரென்றிருக்கும் புத்தம்புதிய ''ஷட்ல் கோர்க்'' வசந்தியினதும் குமாரினதும் பலப் பரீட்சைக்குள்ளாக்கப்பட்டு, தொடர்ந்து நீண்ட நேரமாக நிலத்தைத் தொட்டு விடாமல் அங்குமிங்குமாகக் காற்றில் பறந்து பறந்து கொண்டிருந்தது.

கழுத்தளவுடன் கத்தரிக் கோலுக்கு இரையான கருங்கூந்தல் அசைந்தாட மாறி மாறி இரண்டு கைகளாலும் வெகு வேகமாக ''றைக்கற்'' றைச் சுழற்றி வீசும் நளினம், இவ்விளையாட்டில் வசந்திக்குத்திறனையும் தேர்ச் சிறையும் படம் பிடித்துக் காட்டியது.

''ஆச்சி உங்களுக்கு வேலையில்லாட்டி சும்மா பேசாமல் இருக்கிறது தானே...!'' கிழவியைத் திரும்பித்தானும் பார்க்காமல் விளையாடிக் கொண்டு வசந்தி சொன்ன வார்த்தையில் கோபம் கலந்த வெறுப்புத் தெரிந்தது.

உலகெங்கும் எரிபொருள் பற்றுக்குறை. பாறிக்கிழவியின் உள்ளத்தில் மட்டும் இப்பற்ருக்குறை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லைப் போலும்! அவள் சண்டிலிப்பாயிலிருந்து மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்து பத்துநாள் கூட ஆகவில்லை; அவள் மனதில் தொடர்ந்து ஒரே எரிச்சலும் புகைச்சலும் தான்.

பன்னிரண்டு வயதிலிந்து இடையருது ஐம்பத்தொரு கந்தசஷ்டி விரதத்தைப் பிடித்து விட்ட பாறிக் கிழவி ஆனையிறவுப் பாலத்தை முன்ஞெரு போதும் கடந்ததில்லை. அரிசி, மரக்கறி வியாபாரம் செய்து, சிறு வயதிலேயே தகப்பனை இழந்து விட்ட இரு பெண்களையும் படிக்க வைத்து உத்தியோக மாப்பிள்ளையாகப் பார்த்துத்திருமாணம் செய்து வைத்ததோடு தன் கடமை நிறைவேறி விட்டதென நிம்மதி அடைந்தாள். ஆசிரிய நியமனம் கிடைத்வுடன் கணவனுடன் மட்டக்களப்புக்கு மாற்றத்தை எடுத்துக் கொண்டு வந்து நிரந்தரமாக தங்கி விட்ட மூத்தமகள் மீதான மனக்கசப்புகாரணமாகக் கடந்த இருபது வருடமாக இரண்டாவது மகளுடன் சண்டிலிப்பாயிலேயே தங்கியிருந்தாள். அவளும் இறந்துபோக கடைசிக்காலத்தில் தன் வைராக்கியத்தைக் கை விட்டு, மூர்த்தமகவின் நீண்ட நாள் ஆவலைப்பூர்த்தி செய்யவேண்டுமென்ற நினைப்பினல் வேறுவல்லநிர்க்கதியான நிலையினல் முதன், முறையாக ஆனையிறவு பாலத்தைக் கடந்து; சென்ற வர்ரந்தர்ன் மட்டக்களப்பு வந்து சேர்ந்தாள்.

இந்தப்பகுதியில் பெரிய குடும்பங்கள் எல்லாம் கிறிஸ்தவர்களாக இருந்தால்பாறிக்கிழவியின் மூத்தமகளும் கணவனும் இங்கு வந்த மறுவருடமே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டார்கள். நல்லூர்க் கந்தனின் வரங்கேட்டுப் பெற்றெடுத்த தன்மூத்தமகள் தெய்வானை தன் பெயரை திரேசம்மா என மாற்றிக் கொண்டதை பாறிக்கிழவி இந்தப் பிறப்பிலும் மன்னிக்க மாட்டாள். மகளிடமிருந்து இந்தனை காலமும் அவள் பிரிந்து வாழ்ந்ததும் இதனுலேதான்.

சாதாரண லிகிதராகத் தபாலகத்தில் கடமையாற்றிய இளைப்பாறிய சின்னையரும். மனைவி திரேசம்மாவும் ரீச்சராகி இருவரும் சேமித்தபணத்தைக்கொண்டு பிரதான வீதியருகே [illegible]ப்பு நிலத்தை விலைக்கு வாங்கி, இப்படியெரு நுயூபாசன் வீட்டைக் கட்டியெழுப்பியதைக் கண்டு மூக்கில் விரல் வைத்து வியந்து பேசாதசனம் இல்லை.

ஆனல் இதற்கெனப்பட்ட கடன்களைக் அடைத்துக் கொள்ள முடியாமல் திரேசம்மாவும் கணவனும் முக்குளிப்பது பற்றி பாறிக் கிழவி கேள்விப்பட்டிந்தாள். கணவனும் மனைவியுமாக உழைத்த பணம் எப்படித்தான் கரைந்து போய் விடுகிறதோ! என்று தன்னைக் தானே கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்த கிழவிக்கு, அவர்களது வாழ்க்கை முறைகளை நேரில் பார்த்த போது தான் உண்மை புலனுகியது.

போலிக் கௌரவத்துக்கு அடிமைப் பட்டுவிட்ட தன் மகளது குடும்பத்தின் போக்கு அவளுக்குச் சங்கையினமாகத் தோன்றுவதில் ஆச்சரியமில்லை.

''ராணி... ராணி... ஜிம்மிக்கு ஏன் இன்னும் சாப்பாடு வைக்கல்லா? கேள்வியைக் கேட்டபடியே விளையாட்டில் லயித்திருந்தாள் வசந்தி. வீட்டின் வலது கோடியில் அடர்ந்து கிளைபரப்பி நின்ற வேப்பமர நிழலில் கள்ளிப்பலகையால் செய்யப்பட்ட பெரிய கூட்டுக்குள் நின்ருள் சங்கிலியால் கட்டப்படடு ஜிம்மி, தன் கூரிய நகங்களால் பலகையை பிராண்டியபடி உறுமுகின்றது. திரேசம்மாவின் வீட்டு இராக்கால காவாலாளியான பெட்டை நாய் அது.

—வளரும்—

---

### ஒலங்கள்

அண்ணு அண்ணு
அப்பா அப்பா
எத்தனை ஒலங்கள்
அத்தனையும் பிரிவின் ஒலங்களா
அடக்கு முறையின்
அவலத்தனமான
செயலில் இருந்து எழும்
ஒலங்களா

துயில் கொள்ளப் போகும்
போது
துன்பத்தை வரவளைக்கும்
ஒலங்கள்
விடிவதனைக் காண விரைவாக
எழுந்தபோது
விம்மலுற வைக்கும் ஒலங்கள்

பட்டமதைப் பெறுவதற்கு
படிப்பதனை படித்தும்
பட்டயமாய் கொடியவர் அடிக்க
அவ்வடியை பொறுக்கேலாத
ஆணினம்
விடும் அழுகை ஒலங்கள்

பெண்மைக்கு சிறப்பாம் கற்பு
வெண்மையான கற்பதனை
கருமையாக மாற்றி விடும்
கடையர்களிடம் அகப்பட்ட
பெண்ணினம் விடும் ஒலங்கள்

இதுமட்டுமா இருந்த
இடத்திலேயே
இன மறிய முடியாத வெட்டுக்கள்
வேட்டுக்களை
பாதையிலே செல்பவர்கள்
பத்திரமாக வீடுதிரும்ப முடியாது
உபத்திரவத்தின் சின்னங்கள்
செய்யும் கோளாறு

இனியுமா பொறுப்பது
இனியுமா எம்மிடையே
வேற்றுமைகள்
இனியுமா சொத்து சுகங்கள்
எல்லாவற்றையும் உடைத்
தெறிவோம்
நாம் அனைவரும் தமிழ்க்குலம்
என்ற
உதய சூரியன் இன்றே உதயமா
கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 3- 03 -1989 [ இதழ் 9


## தேச பிதா தந்தை செல்வாவின் நினைவைப் போற்றுவோம்.

இத்தீவில் தமிழ் மக்கள் தமது இனம், மதம், மொழி, பண்பாட்டுடன் தமது தனித்துவத்தைக் காத்துக்கொண்டு தொடர்ந்தும் தமிழ் மக்களாக வாழ்ந்துவரவேண்டுமானுல் அவர்களுக்கு அதற்கென ஒரு தமிழரசு தேவை என்பதை முன்னேடியாக உணர்ந்து கொண்ட பெரியார் தந்தை செல்வநாயகம் ஒருவரே.

ஆயினும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் எத்தனமாக தாம் விரும்பிய தமிழரசை ஒரு சமஸ்டிக் கூட்டாட்சிக்குள் அமைத்துக் கொள்ள தந்தை செல்வா விரும்பினுர்.

இலங்கையில் ஒரு தமிழரசை நிறுவ முற்பட்ட அந்த இயக்கத்தின் இயற் பெயர் இலங்கைத் தமிழரசுக் கட்சி. மேற்படி தமிழரசு சமஸ்டிக் கூட்டாட்சிக்குள் அமைய விருந்தமையால் அதன் காரணப் பெயராக அது சமஸ்டிக் கட்சி எனவும் அறியப்பட்டது.

இத்தீவு சுதந்திரம் அடைந்ததும் முதன் முதலாக எழுந்தது தேசியக்கொடிப் பிரச்சனை! வாளேந்திய சிங்கக் கொடியை ஏற்க மறுத்த தந்தை செல்வா தமது சொந்த வாகனத்தில் அதற்கும் பதிலாக நந்திக்கொடியைப் பறக்க விட்டார். தமிழரசுக் கட்சி எதிர்நோக்கிய முதல் (1952) பாராளுமன்றத் தேர்தல் மேடைகளிலே அதிகம் விமர்ச்சிக்கப்பட்ட விடயங்கள் இரண்டு:- ஒன்று கொடிப் பிரச்சினை இரண்டாவது மலையகத் தோட்டத்தமிழ் மக்களின் குடியுரிமைப் பிரச்சினை.

தேசிய கொடிப் பிரச்சினையின் பின் இந்திய வம்சாவழித் தமிழர்களது வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்மக்களின் மரபு வழித்தாயகம் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் வாயிலாக பறிபோனது இறுதியில் 1956 ஆனி 5 இல் தனிச்சிங்களம் உத்தியோக மொழியாக்கப்பட்டது.

இத்தனையும் நடந்து முடிந்த பின்பே தந்தை செல்வாவை ஒரு தீர்க்கதரிசியாகக் கண்ட தமிழ் இனம் அவரது அரசியல் தலைமையை ஏற்றுக்கொண்டது. 1956 முதல் 1977 ஏப்பிரல் 26ல்தாம் காலமாகும் வரை தமிழ் மக்களை வழிநடத்திய தந்தை செல்வநாயகம் அவர்களது 91 வது ஜனன தினத்தை நன்றியுள்ள தமிழ் மக்கள் நினைவு கூரமறவார்.

யார் யாருக்கெல்லாம் நினைவு முத்திரை வெளியிட்டிருக்கும் ஸ்ரீ லங்காவின் தபால் திணைக்களம் "வேற்றுமையில் ஒற்றுமை காண்பதன்மூலம் இத் தீவில் மெய்யான ஒரே தேசிய இனத்தினை உருவாக்க முனைப்புடன் பாடுபட்ட தனியொரு மனிதரை மதித்துக் கௌரவிப்பதற்கு இந்நாளது வரை தவறி விட்டது. இம்மாபெரும் தவறை அரசுக்கு யாரும் உணர்த்த தவறியிருக்கலாம்.

அத்தகைய தவறுகளால் முனைப்புற்ற தமிழ்த் தேசியம் இன்று சர்வதேச நாடுகளது கவனத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியத்தின் முன்னேடியான தந்தை செல்வாவின் 91 வது பிறந்த தினத்தை எதிர்வரும் 31-3-89ல் கொண்டாடவும் 12 வது சிரார்த்த தினத்தை எதிர்வரும் ஏப்பிரல் 26ல் நினைவு கூரவும் தவறக் கூடாது. தந்தை செல்வாவின் பொது வாழ்வு வரலாற்று உருவில் எழுதப்பட இவ்விருதினங்களும் பயன்பட வேண்டும்.

## சிந்தனை 4

மத்தேயு 24: 32—41

நடந்ததே நடக்கும் நடவாததா நடக்கப் போகின்றது.

அன்று நோவாவின் நாட்களில் நடந்தது என்ன? மக்கள் வழி தவறி நெறி கெட்டு வாழ்ந்தார்கள் இவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தி வாழ்விக்க விரும்பிய இறைவன் எத்தனை ஆலோசனைகளை அன்றைய மக்களுக்கு அவர்தம் அடியவர் வாய் மொழிகளின் வழி தந்தார். தரப்பட்டவை ஒன்றையும் உள் வாங்க மறுத்த மக்கள் பரிசுத்த வழி விட்டு விலகி பாவவழிக்குத் தம்மைப் பங்காளிகள் ஆக்கிக் கொண்டார்கள். பாவம் செய்த ஆத்துமா சாகவே சாகும் என்ற உண்மை நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களின் வரலாற்றில் உண்மையானது.

இறைவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் நல்லவர்களாகக் கண்டு இக்குடும்பத்தின் மக்கள் மூலம் புதிய வரலாறு காணப் புதியதிட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார். இக்கால கட்டத்தில் அழிவின் பாதையில் நின்று வாழ்வியலின் நோக்கம் தவறி, நல்லது என்று இறைவன் கண்ட உலகை அலங்கோலம் ஆக்கும் மனித குலத்தைக் கண்ட இறைவன் மன வேதனை அடைந்தார். என்று ஆதி: 6. 6 வசனம் கூறுகின்றது.

வேதனைப்பட்ட இறைவன் மக்களை வழிப்படுத்தி நெறிப்படுத்த விரும்பி இயற்கையின் வழியாக துன்பம் ஒன்றை உருவாக்கினுர். துன்பம் தொடர்வது கண்டும் மக்கள் மனம் மாறியதாகவே இல்லை.

மனிதன் மனம் மாறித் தன் வழிக்கு வருவான் அவனின் உறவிலே இன்பம் அனுபவிப்பேன் என்ற இறைவனின் [illegible] ஏமாற்றமாய் முடிந்தாது அன்று. ஏற்புடையதாக அமையவே இல்லை.

> மனிதன் மனிதனுக இருக்க விரும்புகின்றுனே அன்று புனிதனுக இருக்க விரும்புவதே இல்லை.

இந்த உண்மையைக் கண்ட நமது ஆண்டவர் தமது வருகையின் நாட்களிலும் நோவாவின் நாட்களில் நடந்தது போலவே நடக்கும் என்றுர்.

அழிவில் இருந்து மக்களைப் பாது காக்க விரும்பிய இறைவன் நோவாவின் மூலம் மக்களுக்கு அறிவுரை தந்தார். அறிவுரையை அலட்சியம் செய்த போது தான் அழைத்த அடியானுக்கும் அடியவனின் அங்கத்தவர்கட்கும் பாதுகாப்புத்தர பேழை கட்டும் பொறுப்பை நோவாவிடம் தந்தார். பேழைக்குரிய பாதுகாப்பு தன்னிடமே உள்ளது என்ற உண்மையை உலகம் அறியும்படி செய்தார்.

நோவாவை அழைத்தவர் நம்மையும் அழைத்தார். அழைக்கப்பட்டவர்கள் தமது பாதுகாப்பிற்கு பேழை அமைக்கும் அறிவை இறைவனே தருவார். அழைத்தவர் அழிக்கமாட்டார். இறைவனுடைய திட்டத்தில் இறை அறிவில் நோவாவைப்போல் பேழை அமைக்கும் பொறுப்பை நம்மிடம் தந்துவிடுகின்றுர்.

இறைவன் நம்மிடம் தரப்பட்ட பொறுப்புள்ள பணிக்கு பாதுகாப்பும் பலத்த அரணுமாக இருப்பார் நாம் பயம் இல்லாது நோவாவைப் போல் பணி தொடருவோம். இறைவனில் இறைவனேடு இறைவனுக்கென்று திட்டமிட்டு வாழும் வாழ்வே அழைக்கப்பட்ட மக்கள் அமைக்கும் பேழைகளாகும். இப் பேழையைப் பாதுகாப்பவர் இறைவனே. அவருடைய பாதுகாப்பில் நாம் வாழமுடியும் இதற்கு புனிதமான விழிப்புள்ள வாழ்வு அவசியம். நம்முடைய வாழ்வு புனிதமானதா? விழிப்புள்ளதா? இவ்விரண்டும் இல்லை என்றுல், நடந்ததே இன்றும் நடக்கும், நடவாததா நடக்கப் போகின்றது.

## செய்திகள்

### இரங்கல் கூட்டம்

மறைந்த யாழ். பல்கலைகழக முன்னுள் துணைவேந்தர். பேராசிரியர் கலாநிதி எஸ். வித்தியானந்தன் அவர்களுக்கு இரங்கல் கூட்டமொன்று வியாழக்கிழமை (9-2-89) பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணக்கல்லூரித் தமிழ் மன்றத்தினரால் தலைவர் எஸ். பி. குணசிலன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டம் திருமதி ஜீவா இரத்தினசபாபதி அவர்களின் இனிய தேவாரத்துடன் ஆரம்பமானது. இதின் போது தமிழ் மன்றதின் போஷகர் திரு. எஸ். ஜே மாணிக்கம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி S. ஜெபநேசன், பேராசிரியர் கலாநிதி S. பத்மநாதன், ஆகியோர் இரங்கல்உரை ஆற்றினுர்கள். மறைந்த வித்தியானந்தன்அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியோடு நெருங்கிய தொடர்புடையவராய் இவர் உருவாக்கிய மாணவர்களுக்கூடாக அவர் தமிழுக்காற்றிய அரும் பெரும் தொண்டினை திரு எஸ். ஜே. மாணிக்கம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

எடுத்த காரியத்தை என்ன இடையூறு வந்தாலும் அவற்றிற்கு தலைவணங்காது கருமமே கண்ணையிருந்து நாட்டின் மீதும் தமிழ்மீதும் கொண்ட கரிசனையை, கலாநிதி எஸ் பத்மநாதன் அவர்கள் தமது உரையில் விளக்கினுர்.

### K. N. H. P. உத்தியோகத்தர்

மேற்கு ஜேர்மன் நிறுவனமொன்றின் ஆதரவில் இலங்கை அங்கலிக்கன் திருச்சபை, யாழ். தென்இந்தியத் திருச்சபை ஆகியன இணைந்து நடாத்தும் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ளசிறுவர் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள் பெண்கள் இல்லம் மற்றும் வேலைத்திட்டங்கள் போன்ற வற்றைப் பார்வையிடும் அதிகாரியாக பருத்தித்துறை - கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தைச் சேர்ந்த திரு. ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் அவர்கள் 1989 ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தின் செயலாளராகக் கடந்த பதினேழு ஆண்டுகள் கடமையாற்றி வரும் இவர் வடக்கு - சபசங்க ( சினர் ) இணைச்செயலாளராகவும், இலங்கை மெதடிஸ்த மகாசங்க உறுப்பினராகவும் சில ஆண்டுகள் விளங்கிய வருமாவர்.

### கொல்வின் மறைவு

லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தமது 82 வது வயதில், 27. 07. 1989 திங்கட்கிழமை கொழும்பு தனியார் மருத்துவனை ஒன்றில் காலமானுர். 1947 ஆண்டின் முதலாம் பாரளுமன்ற தேர்தலில் எம், பியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1970 ஆண்டில் பெருந்தோட்டத்துறை, அரசியல் அமைப்பு விவகார அமைச்சராக பணி புரிந்தார். 1972 ஆண்டு குடியரசு யாப்பை தயாரித்து அப்போதை அரசால் வெளியிட்டார். 1982 ஆண்டில் நடத்த ஜனுதிபதி தேர்தலில் போட்டியிட்ட இவர், 1989 ஆண்டில் நடத்த பாரளுமன்றத் தேர்தலில் ஐக்கிய சோஷலிச முன்னணியின் தேசிய பட்டியல் மூலம் எம். பி. பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டு இருந்தார். இவர் தமது கண்களை கண் தான சங்கத்திடம் ஒப்படைக்குமாறு ஏற்கனவே குறிப்பிட்டு உள்ளர். இவரது பூதவுடல் 02. 03. 1989 வியாழக்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பெரும் திரளான மக்கள் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது.

### பிறந்த நாள்

யாழ் தென்னிந்திய திருமண்டலப் பேராயர் அதி. வண. D. J. அம்பலவாணர் அவர்களின் பிறந்த தினத்தை ஒட்டி வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையில் 28. 02. 1989 புதன்கிழமை காலை 7.30 மணிக்கு ஒரு விஷேட ஆராதனை நடத்தப் பெற்றது. இதற்கு ஆதீனத்தின் குருமார்கள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியார்கள் பொதுமக்கள் வட்டுக்கோட்டைத் திருச்சபையினர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர் சபை ஊழியன் வண. A. ஜெயக்குமார் அவர்கள் பேராயர் அவர்களிற்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து அந்நாளிற்குரிய செய்தியை வழங்கினுர் ஆராதனையின் இறுதியில் வருகை தந்தோருக்கு வட்டுக்கோட்டைத் திருச் சபையினரால் காலையுணவு பரிமாறப்பட்டது. காலையுணவு பரிமாறும் வேளையில் யாழ் கல்லூரி அதிபர் Dr. S. ஜெபநேசன் அவர்கள் பேராயரின் சேவையைப் பாராட்டிப் பிறந்தநாள் வாழ்த்துரையை வழங்கினுர்.

### ராஜினாம

தமிழ் நாடு சட்டசபையில் எதிர்கட்சி தலைவி செல்வி ஜெயலிதா, மூப்பனுர் ஆகியோர் தமது பதவியை ராஜினமா செய்தை அடுத்து தமிழ் நாடு ராஜயசபா உறுப்பினர் இருவார்க்கான தேர்தல் மார்ச்சு- 20 திகதி திங்கட் கிழமை நடைபெற உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*EASTER MESSAGE*

## In Place of Fear

**'For they were afraid.' — Mk. 16: 8.**

Sometimes modern novelists end their stories like this. The reader is left not knowing what to think. It is said by some that Mark was clever enough to anticipate this little trick. He leaves us suspended.

Through long years men have argued about the way Mark's Gospel ended. However, it ended the place it ends for us is with the words 'for they were afraid'. The Good News of God began and ended with fear. To find God breaking through at Bethlehem one dark night when all was still and only spirits abroad must have been shaking experience for the strongest nerve. To find a grave open, black but deserted when one expected only a body and stillness before the dawn was not a sight to be greeted by pleasantries - "they were afraid'.

> 'Now walks Barabbas free, and Christ is bound, The sun is up,
> our hope is under ground.
> Come Mary Magdalen, Salome, come, With funeral odours
> grace the guarded tomb'.
> Seeking immortal Act among the dead, They heard his angel,
> trembled, turned, and fled.

*1. Simple Fear.* Sometimes fear is easily under-stood—fear for one's own life or the safety of friends. The three women came to the tomb— and the tomb without a door stood there in the early morning dark and empty. Already beside themselves with terror they heard the words 'He is leading the way for you into Galilee: you will see Him there as He told you'. Now T. W. Manson brooding over this suggests that when the women were given the message they delivered only a part of it. They did not deliver the whole message because they were afraid. Here was a simple but terrible fear for their own safety and those they loved. They were afraid to go back to Galilee for their safety lay only in some shelter and hiding place away from men who made it their job to fix others to a cross. There was no better hiding place than the big city-Jerusalem itself with its many people. Here it was that Peter and the other disciples were to meet their Lord—here at Jerusalem and not away in Galilee. And here broke out the new ministry of our Lord—the continuing ministry—full of compassion and love in seeking and saving lost men and women.

Is it possible then that people who hope to hide in darkness, lost among a tumult of strangers, suddenly find themselves like beacons set on a hill? This was to be no hole in the corner affair and if simple fear drove the disciples to hide then it was a hiding where they found themselves at the centre of the world eyed by a million eyes.

*2. The Fear of the Lord.* But there is the fear not so easily understood. We come on an Easter morning to shout and praise but we see no wonder here until we have looked into the abyss and felt afraid. A Roman General once went into the Holy Place slashing the veil with his sword. He had heard of strange things hidden behind that sacred veil but on that day when he looked, he saw nothing. He saw nothing, yet men say that seeing nothing he was never able to forget what he had seen! So now on this Easter morn the women came and looked, saw nothing and trembled,

There is always a fear when men sense, mysteriously, a new power breaking into the world. The new life now coming to lead men into new ways. 'Death has no more dominion'— where, then, is the life set free and how will it appear? The men and women open to the ways of God feel this fear—they look at a miracle in the early dawn and they are afraid. Others may stand there by the open empty grave with no sense of wonder for they see only what they see and there is nothing beyond.

Now in our day when men are not sure whether it is a way of life or a way of death we are called to take, there is a strange mingling of hope and fear. An aged philosopher asks 'Has man a future?' Who can say?

*The Fear That Turns to Triumph.* Here at the centre of the life of many peoples—here at Jerusalem, where people hide from fear, the saving power of God is to be made known. Poor stumbling, trembling people so weak before the strength of Caiaphas and Pilate. Here at the centre—in the places where multitudes gather. London, New York and Mosocow, salvation will be wrought. In this place where men have most cause to fear, yet where they hide from fear. At the centre the victory will be won when people are loyal to the living Word of their Lord. This is the victory however fearfully the foundations may shake.

When men have this fear, the fear of the Lord, because they have looked deep into an open grave, there is nothing else left to fear. From this dark place comes power greater than all principalities and powers and the shout goes up 'He is born in a grave!'

In T. S. Eliot's play *Murder in the Cathedral* the priests bar the door against the enemy. Then Thomas the Archbishop cries—

> We have fought the beast And have conquered.....
> Now is the triumph of the Cross, now Open the door!
> I command it. Open the door!

So Mark's story ends—'for they were afraid. And we the readers, are left vibrant and disturbed. Perhaps there was no other way for Mark to tell us what he had to say. The truth we see lies beyond all narrative for this is an attempt to explore the infinite.

*Rev. Dr. Howard Williams.*

**A SERVICE OF THANKSGIVING**

for the life of

The Late

Mr. Eliathamby Thevarajah

will be held at

*St. John the Baptist's Church, Chundikuli.*

**on Monday the 6th of March, 1989 at 3.30 p. m.**

## TRANSFER OF MISSIONARIES

**Mr. & Mrs. J. P. Ampalavanar who were working in Western Samoa for the past five years, have been transfered back to Kiribati (pronounced Kiribas) in the Central Pacific. The church in Samoa could not have their work permit renewed because of the new Government regulations.**

When the Ampalavanar joined the missionary service in 1979 with the Council for the World Mission, sponsored by C. S. I., they were appointed to work with the Kiribati Protestant Church in the Gilbert Islands as Kiribati was then known. After working there for four years, the C. W. M. transferred them to work in Western Samoa, to work with the Congregational Christian Church in Samoa.

In Kiribati, both Mr. & Mrs. Ampalavanar are teaching in Hiram Bingham High School, named after Dr. Hiram Bingham, the first missionary to the Gilbert Islands from Boston. It is a Boarding School where all pupils are boarders from various Islands, and they usually go to their parents only at the end of the year for Christmas. Recently, the school has been upgraded as a Senior Secondary School and it prepares students for the New-Zealand School Certificate Examination.

## Tamil Refugee Action Group U. K.

The Tamil Refugee Action Group in the U. K. was formed in May 1985 to help the Tamil refugees who came to U. K. The group was and up to now has the support of the several local government bodies and aid agencies. In 1987 the constitution of the group was changed under the companies Act of 1985. One of the objectives under this new constitution is as follows.

To promote, co-ordinate and/or conduct research on the circumstances which lead to Tamils emigrating and to disseminate the result thereof.

The group devised ways and means to house the refugees. As a result of this valuable service to the Tamil Community in the United Kingdom it was necessary to organise a separate body known as the Housing Association. The two different organisations work in close liaison with one another and are housed under one roof. The Address is as follows.

**Tamil Refugee Action Group**
(TRAG)
No. 2
2nd Floor.
Mill Mead Business Centre
Mill Mead Road.
London NI7 9Qu

At the annual general meeting of the TRAG the following were elected Mr. Victor E. Cherubim (Chairman) Mr. S. Pathmanathan (Vice-Chairman). Mr. S. J. Joseph was appointed as the Secretary to the Group.

The members of the management committee had visited Tamils detained at the various detention centres and review their cases with the authorities concerned. As at November 1988 there are 52 Tamils detained.

## Association of Christian Tamils (A C T)

Some of the Christians belonging to the Catholic Church and several free Churches have joined together to form the above association. The main objective of the association is to make public the Tamil problem to the

( Continued 1th Page. )

Registered as a News paper at the G. P. O., Sri Lanka under No. Q/J/64/News /87
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday February 1989 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org